"காந்தி" பிரசுரம் விலை அரையணா.

# குருவாயூர் யுத்தம்

A.V. Raman



4646.

"காந்தி" ஆபீஸ்
29, செம்புதாஸ் தெரு, சென்னை.
(ஜனவரி, 1933)

162



குருவாயூர் என்ற கடலில் ஆலயப்பிரவேச வோட் என்ற கொந்தளிப்பு ஏற்பட்டு, கடலுக்குள் கிடந்த வைதீகர் என்ற விஷமீன்களை கரையில் ஒதுக்கி தள்ளிவிட்டது. வைதீகர், தண்ணீரில்லா மீன்கள்போல தவிக்கின்றனர்.

# குருவாயூர் யுத்தம்

மகாத்மா காந்தி, தீண்டாதாருக்கு கொடுத்துள்ள தனித்தொகுதியை நீக்கவேண்டும் என்பதற்காக செப்டம்பர் 20ஃ பட்டினி ஆரம்பித்தார். குருவாயூர் கோவிலில் ஹரிஜனங்களை அநுமதிக்க வேண்டும் என்பதற்காக ஸ்ரீ கேளப்பன் என்ற மலையாள தலைவரும் பட்டினி ஆரம்பித்தார். குருவாயூர் கோவிலுக்குள் ஹரிஜனங்களை விடவேண்டும் என்பதற்காக சென்ற வருஷம் முதலே அங்கு சத்தியாக்கிரகம் நடைபெற்று வந்தது. ஸ்ரீ கேளப்பனை பட்டினியை நிறுத்தும்படி பலர் கேட்டுக்கொண்டும் அவர் நிறுத்தவில்லை. குருவாயூர் கோவில் தர்மகர்த்தாவான கள்ளிக்கோட்டை ஸாமூதிரி பட்டினியை நிறுத்தும்படியும், நிறுத்தியபின்பு, கோவில் பிரவேசத்திற்கு தம்மாலான முயற்சி செய்வதாகவும் சொன்னார். கோவிலை திறந்தாலொழிய பட்டினியை நிறுத்த முடியாதென்று ஸ்ரீ கேளப்பன் பதிலளித்தார். இதற்கிடையில் மகாத்மா விருப்பப்படி ஏரவாடா ஜெயிலில் ஜாதி இந்துக்களுக்கும் ஹரிஜனங்களுக்கும் ஒப்பந்தம் ஏற்பட்டு, முதல் மந்திரி தனித் தொகுதியை ரத்துச்செய்யும்படி நேரிட்டதால், மகாத்மா தமது பட்டினியை நிறுத்தினார். கேரள தலைவர்கள் மகாத்மாவை கண்டு பேசி, கேளப்பன் பட்டினி விரதம் திடீரென்று ஆரம்பிக்கப்பட்டுவிட்டதாகவும், தற்சமயம் நிறுத்திவைத்தால், சீக்கிரமாக குருவாயூர் கோவிலை திறப்பதற்கு வேண்டிய வேலைகள் செய்வதாகவும் வாக்குறுதி கொடுத்தார்கள். போதுமான முன் அறிவிப்பு இல்லாமல் பட்டினி ஆரம்பித்தது சரியல்லவென்றும், ஆகவே உடனே நிறுத்தும்படியும், பின்னால் ஆரம்பிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டால் தானும் அவருடன் சேருவதாகவும் மகாத்மா ஸ்ரீ கேளப்பனுக்கு தந்தி கொடுத்தார். கேளப்பன் மகாத்மா விருப்பப்படி பட்டினியை

நிறுத்தினர். ஆனால் ஜனவரி மாதம் 1உக்குள் ஸாமூதிரி குருவாயூர் கோவிலை ஹரிஜனங்களுக்கு திறந்துவிடாவிட்டால் மறுபடியும் பட்டினி ஆரம்பிப்பேன் என்று சொன்னர். உடனே இந்தியாவெங்கும் ஆலயப் பிரவேசத்திற்காக பலமான பிரசாரம் ஆரம்பமாயிற்று. நவம்பர் மாதம் 5உ மகாத்மா காந்தி வெளியிட்ட அறிக்கையில் பின் வருமாறு சொன்னர் :—

"நான் அவசரமாய் கேட்டுக்கொண்டதின்பேரில்தான் ஸ்ரீ கேளப்பன் தமது பட்டினியை மூன்று மாதங்களுக்கு நிறுத்திவைத்திருக்கிருர். 1933-ம் வருஷம் ஜனவரிமாதம் 1உக்குள் குருவாயூர் கோவிலுக்குள் மற்ற ஜாதி இந்துக்களை எந்த நிபந்தனைகளோடு அநுமதிக்கிருர்களோ அதே நிபந்தனைகளோடு ஹரிஜனங்களை அநுமதிக்காவிட்டால், அதற்காக ஸ்ரீ கேளப்பன் பட்டினி ஆரம்பிக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டால், நானும் அவரோடு பட்டினி ஆரம்பிக்க கட்டுப்பட்டிருக்கிறேன்."

நவம்பர் மாதம் 7உ யன்று மகாத்மா வெளியிட்ட மற்றொரு அறிக்கையில் பின்வருமாறு குறிப்பிடுகிருர் :—

"இந்தியாவில் ஆடம்பரமின்றி அடக்கமாக அரிய ஊழியம் செய்து வருவோரில் ஸ்ரீ கேளப்பன் ஒருவர். அவர் என்றைக்காவது ஒருநாள் பிரபல பொதுஜன ஊழியராக வரக்கூடியவர். அவர் மலையாளத்தில் ஒரு சிறந்த ஊழியர். அவர் அங்கு நெருங்கக்கூடாதவர், காணக்கூடாதவர் என்று விலக்கப்பட்டிருப்பவரோடு கலந்துகொண்டார். வைக்கம் சத்தியாக்கிரஹ காலத்தில் அவரோடு உழைக்கக் கூடிய பெருமை எனக்குக் கிடைத்தது. அதற்கு முன்னலிருந்து பல நாட்களாக ஆரம்ப முதலே அவர் ஒடுக்கப்பட்ட வகுப்பினரின் முன்னேற்றத்துக்காகப் பாடுபட்டு வருகிருர். அவர் பலநாள் பொறுத்திருந்து கடைசியாக ஹரிஜனங்களுக்கு குருவாயூர் ஆலயத்தைத் திறந்து வைப்பதற்காக தமது உயிரையே கொடுப்பதென முடிவுக்கு வந்துவிட்டார். ஆனல் அவரது உபவாசத்தில் ஒரு குறையிருப்பதை நான் கண்டுபிடித்தேன். அதை உடனே அவ

4646.



ருக்கு எடுத்துக் காட்டினேன். அவர் தமக்கு வெற்றி கிடைக்கும் நேரம் நெருங்கியிருந்ததாகக் கருதினாலும் நான் சொன்னதைக் கேட்டு உடனே தமக்கு ஏற்படக்கூடிய வெற்றியையும் கருதாது எனது வார்த்தைகளுக்குக் கட்டுப்பட்டு உபவாசத்தை நிறுத்தினார். அவர் கொடுத்துள்ள தவணை கடந்து மீண்டும் உபவாசம் ஏற்றுக்கொள்ள வேண்டிய அவசிய மேற்பட்டால் நானும் அவரோடு உபவாசமிருக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ஸ்ரீ கேளப்பன் அவரது விதிப்படி நடந்து கொள்ளட்டும் என விட்டுவிட்டால், நான் இந்திய நாட்டின் ஊழியனாக விருப்பதற்கே யோக்கியதையற்றவனாவேன்."

## பொதுஜன கிளர்ச்சி

மகாத்மா அறிக்கையைக் கண்டதும் இந்தியாவில் பெரிய கிளர்ச்சி ஏற்பட்டது. கள்ளிக்கோட்டை ஸாமூதிரிக்கு கவியரசர் ரவீந்திரநாத தாகூர் முதல் பள்ளிக்கூட மாணவர்வரை சகலரும் குருவாயூர் கோவிலை திறக்கும்படி கடிதங்களும் தந்திகளும் அனுப்பினர். ஸாமூதிரி அசையவில்லை. பட்டினியை நிறுத்தினால் குருவாயூர் ஆலயப்பிரவேசத்திற்கு தம்மாலானதை செய்வதாக கேளப்பனுக்கு வாக்குறுதி கொடுத்ததை ஞாபகமூட்டினார்கள். அதற்கு ஸாமூதிரி சொல்லிய பதில்தான் வேடிக்கையானது. கேளப்பன் தான் கேட்டுக்கொண்டபோது பட்டினியை நிறுத்தவில்லையாம். மகாத்மா சொன்னபின்பு தான் நிறுத்தினாராம். ஆகவே பழைய வாக்குறுதி தம்மை கட்டுப்படுத்தாது என்று சொல்லிவிட்டார். இனி ஸாமூதிரியை நம்பி பயனில்லை என்று ஏற்பட்டவுடன், வேறு வழிகளில் வேலைசெய்ய தலைவர்கள் தீர்மானித்தார்கள். கோவில்களில் ஹரிஜனங்களை அநுமதிக்கும் சம்பந்தமாக தற்சமயமுள்ள சட்ட இடையூறுகளை நீக்குவதற்காக டாக்டர் சுப்பராயன் சென்னை சட்டசபையில் ஒரு மசோதா கொண்டுவந்திருக்கிறார். அம்மாதிரி மசோதாக்களைப்பற்றி விவாதிக்கு முன்பு வைசிராய் அநுமதி வேண்டுமாகையால், தற்சமயம் அந்த மசோதா வைசிராய் ஆலோசனையில் இருக்

கிறது. ஆனால் சட்ட இடையூறுகளை உடனே நீக்கவேண்டு மென்று சர்க்காரை கேட்பதாக சென்னை சட்டசபையில் ஒரு தீர்மானம் நிறைவேறியது. ஜனங்களுக்கு குருவாயூர் சம்பந்தமாக என்ன அபிப்பிராயம் இருக்கிறதென்பதைப் பற்றி யாருக்கும் சந்தேகமே கிடையாது. ஆனால் எதிர் கட்சியார் தங்களுக்கே அதிக ஆதரவு இருப்பதாய் கூச்சல் போட்டு வந்ததாலும், சர்க்கார் கண்களை திறக்கவேண்டி யிருந்தபடியாலும் வோட் எடுப்பது என்று தீர்மான மாயிற்று. வோட் முடிவை தாம் ஒப்புக்கொள்ளுவதாக மகாத்மா சொன்னார். ஸாமூதிரியை இந்த ஒப்பந்தத்திற்கு அழைத்தும் அவர் மறுத்துவிட்டார். வோட் எடுக்கும் போது அவர் பிரதிநிதிகளை கூட அனுப்பும்படி கேட்டதற் குக்கூட மறுத்துவிட்டார். கடைசியாக குருவாயூர் கோவில் இருக்கும் பொன்னானி தாலூகாவில் ஜாதி இந்துக்களின் அபிப்பிராயத்தை அறிய வோட் எடுக்க டிசம்பர் மாதம் 1௨ ஆரம்பமாயிற்று. அதன் முடிவைப்பற்றி டிசம்பர் 24௨ தலைவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையை கீழே குறிப்பிடுகிறோம்.

## தலைவர்கள் அறிக்கை

வோட் இலாகா டைரக்டர் ஸ்ரீ. கே. மாதவன் நாயர், கேரள தீண்டாமை விலக்கு சங்கத் தலைவர் ஸ்ரீ. யு. கோபால மேனன், ஸ்ரீ. சி. ராஜகோபாலாச்சாரியார் இவர்கள் மூவ ரும் சேர்ந்து பின்வரும் அறிக்கையை வெளியிட்டிருக்கின்ற னர் :—

"குருவாயூர் ஆலயத்தில் தீண்டப்படாதார் என் றழைக்கப்படும் ஆதி ஹிந்துக்கள் தரிசன உரிமை சம்பந்த மாக பொன்னானி தாலூகாவில் எடுத்த வாக்குகள் எண் ணிக்கை விபரத்தை சந்தோஷத்துடன் வெளியிடு கிறோம்.

பொன்னானி தாலூகா 430 சதுரமைல் விஸ்தீரண முள்ளது. அதில் 123 கிராமங்களிருக்கின்றன. மொத்த ஜனத்தொகை 6,26,470. ஆனால் ஷை ஜனத்தொகையில் 3,24,500 பேர்தான் ஹிந்துக்கள். இதில், தற்சமயம் ஆதி

ஹிந்துக்களை நீக்கி, ஆலயதரிசன உரிமையுள்ளவர்கள் 65,000 பேர்தான். ஷை தாலூகாவில் மொத்தம் ஜாதி ஹிந்து (சவர்ணர்) வீடுகள் 8416 தான். வாக்குகள் எண்ணிக்கை வேலைக்காக இந்த தாலூகாவை ஏழு பிர்க்காக்களாக (பிரிவுகளாக) பிரித்துக்கொண்டோம். மொத்தம் 8416 ஜாதி ஹிந்துக்கள் (சவர்ணர்) வீடுகளில், 8141 வீடுகளுக்கு வாக்குகள் கணக்கிடும் தொண்டர்கள் சென்றனர். ஒவ்வொரு தொண்டரிடமும் ஒவ்வொரு புஸ்தகம் இருந்தது. அந்த புஸ்தகத்தில் வாக்குக் கொடுக்கும் ஹிந்துக்கள் தனித்தனியாக ஆலயப்பிரவேசத்துக்குச் சாதகமாகவோ அல்லது பாதகமாகவோ, அல்லது நடுநிலைமை வகித்தோ தங்களுடைய வாக்குகளை பதிவுசெய்ய வசதியளிக்கப்பட்டது. தொண்டர்கள் விஷயத்தை ஒவ்வொருவருக்கும் வெகு தெளிவாய் எடுத்துச்சொல்லித் தான் அவர்களுடைய வாக்குகளை பதிவு செய்தனர். இந்த வேலை டிசம்பர் மாதம் முதல் தேதி ஆரம்பித்து 22-ந்தேதி முடிந்தது.

ஜாதி ஹிந்துக்களில் சிலரும், ஸாமூதிரியின் ஆளுகைக்குட்பட்டஆலயங்களில் சம்பந்தப்பட்டிருந்த சிலரும்,ஸாமூதிரிக்குப்பயந்து வோட் செய்ய மறுத்துவிட்டனர். மற்றும் சிலர் ஆலயப் பிரவேசத்துக்கு பாதகமாக ஓட் செய்தனர். வோட் செய்ய மறுத்தவர் தொகை 7302. அதாவது 100-க்கு 27 வீதம் என்று கூறலாம். இதில் 4200 பேர் பெண்கள். எனவே இதில் ஆச்சரியம் எதுவுமில்லை.

ஆலயப்பிரவேசமுள்ள உரிமையுள்ள ஜாதிஹிந்துக்கள் 65000 ல் மைனர் குழந்தைகளை நீக்கிப் பார்த்தால் 30,000 தான் பெரியவர்கள், அதாவது விவரம் தெரிந்தவர்களிருக்கக்கூடும். இதில் 27,465 பேரிடம் அதாவது 8141வீடுகளுக்கு தொண்டர்கள் சென்றனர். 7302பேர் வோட் செய்ய மறுத்தது போக பாக்கி 20163 பேர் பின் கண்ட விவரப்படி வோட் செய்தனர் :—

ஆதி ஹிந்துக்கள் ஆலயப் பிரவேசத்துக்கு சாதகமாக 15,568 பேர். (இது நூற்றுக்கு 77 வீதமாகிறது.)

பாதகமாக 2,579 பேர். (இது நூற்றுக்கு 13 வீதமாகிறது.)

நடுநிலைமை வகித்தவர் : 2,016 பேர். (அதாவது நூற்றுக்குப் பத்து பேர்).

பிர்க்கா வாரியாக கணக்கிட்டால், சாதகமாக ஒட்டுகள்.

| | | | |
|---|---|---|---|
| திரூர் | நூற்றுக்கு | 77 | வீதம், |
| குட்டிபுரம் | ,, | 82 | ,, |
| பொன்னானி | ,, | 84 | ,, |
| திருத்தளா | ,, | 81 | ,, |
| அண்டத்தோடு | ,, | 84 | ,, |
| சௌகாட் | ,, | 64 | ,, |
| நட்டிக்கா | ,, | 65 | ,, |

இதில் 8000 பெண்களுக்கு மேல் ஆலயப் பிரவேசத்துக்கு சாதகமாக ஓட் செய்திருப்பது குறிப்பிடத்தக்கது.

வோட் செய்ய மறுத்தவர்களையும், பாதகமாக ஓட்செய்தவர்களுடன் சேர்த்துப் பார்த்தாலுங்கூட, பாதகமானவர்கள் தொகை மொத்தத்தில் நூற்றுக்கு 36 தானாகிறது. எனவே அந்த கணக்குப்படியும் 100-க்கு 64 பேர் ஆலயப் பிரவேசத்துக்கு சாதகமாக இருக்கிறார்கள்.

ஸாமூதிரி சம்பந்தப்பட்டவரை இந்த வேலை எவ்வளவு தூரம் பலனளிக்குமென்று எதுவும் திட்டமாகச் சொல்ல முடியா விட்டாலுங் கூட, பொதுவாக இந்த வேலையின் பயனாக மலையாளத்திலும், குறிப்பாக பொன்னானி தாலூகாவிலும் பொதுஜன உணர்ச்சியும் ஊக்கமும் அதிகமாக ஏற்பட்டுவிட்ட தென்பதை எவரும் மறுக்க முடியாது. இதற்குமுன் ஒருநாளும் நடக்காத பிரசாரம் வீட்டுக்கு வீடு தீவிரமாய் நடந்திருக்கிறது. இந்த வேலையை அதிக திருப்திகரமாக குறித்த காலத்துக்குள் முடித்துக்கொடுத்த கிராமப் பிரசாரகர்கள், டிவிஷனல் உத்தியோகஸ்தர்கள் இவர்களுடைய முயற்சியையும், உதவியையும் பெரிதும் பாராட்டி அவர்களுக்கு மனமார்ந்த வந்தனமளிக்கிறோம். அவர்களுடைய பொறுமையும், தியாகபுத்தியும், விடா முயற்சியும், மிகவும் பாராட்டத் தக்கவை."

வோட் முடிவு குருவாயூர் கோவிலுக்குள் ஹரிஜனங்களை விடுவதற்கு சாதகமாய் ஏற்படவே, மகாத்மா காந்தியை எரவாடா ஜெயிலில் பார்த்து பேசுவதற்காக ஸ்ரீமான்கள். சி. ராஜகோபாலாச்சாரியாரும், கேளப்பனும் போனார்கள். ஜனங்களைப் பொறுத்த வரையில் தீண்டாமையைப் போக்குவதில் எவ்வித அசிரத்தையும் இல்லையென்றும், சட்ட சம்பந்தமான இடையூறுகளே குறுக்காய் நிற்பதாகவும் மகாத்மாவுக்கு எடுத்துகாட்டினார்கள். கடைசியாக டிசம்பர் மாதம் 29௳ யன்று மகாத்மா காந்தி தாம் ஜனவரி மாதம் 1௳ இரவு 12 மணிக்கு ஆரம்பிப்பதாயிருந்த பட்டினியை ஆரம்பிக்காமல் ஒத்திவைக்க ஒப்புக்கொண்டார். இந்த செய்தியைக் கேட்டதும் இந்தியாவெங்கும் சந்தோஷம் பொங்கியது. டாக்டர் சுப்பராயன் மசோதாவிற்கு சர்க்கார் அநுமதி கொடுக்கக் கொஞ்சம் சாவகாசம் வேண்டும் என்பதற்காகவே மகாத்மா தமது பட்டினியை நிறுத்தி வைத்திருக்கிறார் என்பதை மறந்துவிடக் கூடாது. எந்த காரணத்தாலாவது மசோதாவைச் சட்டமாக்காமல் நிறுத்தி வைக்க நேரிட்டால், மகாத்மா மறுபடியும் பட்டினியை ஆரம்பிக்க நேரிடும். இவ்விஷயமாக மகாத்மா காந்தி டிசம்பர் மாதம் 30௳ வெளியிட்ட அறிக்கையை கீழே பிரசுரிக்கிறோம்.

## மகாத்மா அறிக்கை

"ஸ்ரீமான்கள். ஸி. ராஜகோபாலாச்சாரியார், கே. மாதவன் நாயர், கேளப்பன் இவர்களுடன் பூரணமாகக் கலந்து பேசினேன். என்னுடன் சேர்ந்து ஆலோசிக்கும் பொருட்டே அவர்கள் புனா வந்தனர். குருவாயூர் மகாஜன வாக்கு முடிவுகளை அவர்கள் என்னிடம் சமர்ப்பித்தனர். குருவாயூர் ஆலயம் பொன்னானி தாலூகாவிலிருக்கிறது. அத்தாலூகாவிலேயே மகாஜன வாக்கு எடுத்தனர். இதற்கு முன் இவ்வளவு ஜாக்கிரதையாகவும், கண்டிப்பான கணக்குப்படியும் மகாஜன வாக்குக் கணக்கை அநேகமாக எடுத்திருக்க மாட்டார்களென்றே நினைக்கிறேன். ஓட்டர்களில் 100 க்கு 73 பேர்கள் வீதம் ஓட் செய்வதும் எனக்கு

தெரிந்தவரை அபூர்வமே யாகும். உண்மையை அறிய வேண்டிய உத்தேசத்துடன், ஆலய தரிசனார்த்திகளின் அபிப்பிராயத்தை மட்டுமே அறிந்தனர். அதாவது குருவாயூர் ஆலயம் செல்ல உரிமை பெறாதவர்களையும், ஆலயப் பிரவேசம் விரும்பாத ஆரிய சமாஜிகள் போன்றவர்களையும் ஓட்டர் ஜாப்தாவில் சேர்க்கவில்லை. உண்மையில் ஆலயத்திற்கு செல்பவர்கள் யார் என்பதை நிர்ணயிக்க ஏதாவது ஓர்வழியைக் கண்டு பிடிக்க வேண்டுமென எண்ணியிருந்தேன். அது சம்பந்தப்பட்ட நுணுக்கமான விஷயங்களைப் பற்றி நான் நினைக்கவில்லை. ஆனால் அது முற்றிலும் அனுபவ சாத்தியமல்லவென்பதை அறிந்து கொண்டு விட்டேன். எனவே, ஆலயம் செல்வதில் நம்பிக்கையுள்ளவர்களும், ஆலயம் தொழுவது ஹிந்துமத தர்மத்தின் ஓர் அம்சமென்ற பக்திகரமான நம்பிக்கை யுடையவர்களும், குருவாயூர் கோவிலுக்குள் செல்ல உரிமை பெற்றவர்களும், மட்டுமே ஓட்செய்ய முடியுமென அறிவிக்கப் பெற்றது.

குருவாயூர் கோவில் தரிசனத்திற்கு அத்தாலூகாவில் சுமார் 65,000 பேர் உரிமை பெற்றுள்ளனர். அதில் வயது வந்தோர்களின் எண்ணிக்கையை 30,000 என மதிப்பிடலாம். ஆண் பெண்களுள்ளிட்டு வயது வந்தோரில் 27,465 பேர்களை ஓட் பதிவு செய்யுமாறு அணுகி கேட்டுக்கொண்டிருக்கின்றனர். அதில் 100 க்கு 56 பேர்கள் வீதம், ஹரிஜனங்கள் ஆலயப் பிரவேசத்திற்கு சாதகமாகவும், 9 பேர்கள் பாதகமாகவும், 8 பேர் நடு நிலைமையாகவும், பாக்கி 27 பேர் வோட் செய்யாமலு மிருந்திருக்கின்றனர்.

பலவித பிரதிகூலகங்களுக்குக் கிடையே ஓட்டெடுக்க வேண்டி யிருந்ததென்பதை ஞாபகத்தில் வைக்கவேண்டும். ஸாமூதிரி ஒத்துழைக்க மறுத்துவிட்டார். இதில் சம்பந்தப்பட்ட ஊழியர்களையும், அவர்களது வேலை முறையையும் பற்றி அவர் அவதூறுகளும் கூற முற்பட்டாரென்பதை எடுத்துச் சொல்லவேண்டி யிருப்பதற்கு நான் வருந்துகிறேன்.

பொன்னானி தாலுகா வைதிகத்திற்கு ஓர் கோட்டையாகும். எனினும் தேசமெங்கும் தற்போது கியாதிபெற்

றுள்ள அத் திருக்கோயிலில் தீண்டாதார்களை அனுமதிப் பதை திட்டமான மெஜாரிட்டியார் ஆதரித்திருப்பது குறிப் பிடத்தக்கதாகும்.

ஜனவாக்கு கணக்கு விவரங்களிலிருந்து பலவற்றை தெரிந்துகொள்ளலாம். எனது உபவாச உத்தேசத்தை அறிந்திருந்தும், ஆண், பெண்களில் சிலர் எவ்வித ஆலசி யமுமின்றி, தங்கள் ஆட்சேபத்தை பதிவு செய்திருக்கிறார் கள். நடு நிலைமை வகித்தவர்கள், ஒத்துழைக்க மறுத்தவர் கள் இவர்களின் மனக் கருத்தை நான் அறிந்துகொண் டிருக்கிறேன். அவர்கள் எல்லோரும் ஓட் செய்திருப்பார் களாகில் ஹரிஜன ஆலயப் பிரவேசத்திற்கு விரோதமாக ஓட்டை பதிவு செய்திருக்க முடியாது. அவர்களுள் நான் கில் ஒரு பங்கினராவது ஆலயப் பிரவேசத்தை ஆதரிப்ப வர்களா யிருப்பரென்று நான் கூறுவது நேர்மையேயாகு மென மதிக்கிறேன். எனவே மொத்த ஓட்டர்களுள் 100-க்கு 65 பேர்கள் ஆலயப் பிரவேசத்திற்கு ஆதரவளித் தவர்களாவர். நடு நிலைமை வகித்தவர்களையும், ஓட் செய்யா மலிருந்தவர்களையும் கணக்கிடாவிடில், 77o/o ஓட்டர் கள் ஆலயப் பிரவேசத்தை ஆதரித்தவர்களாவர். இக் கணக்கை எவ்விதம் புரட்டினாலும் ஹரிஜன ஆலயப் பிர வேசத்தை ஓட்டர்களில் திட்டமான மெஜாரிட்டியார் ஆத ரிக்கின்றனரெனும் முடிவை எவரும் எவ்விதத்தும் ஆட்சே பிக்க முடியாது. குருவாயூரைச் சுற்றியுள்ள தரிசனார்த்தி களுள் மெஜாரிட்டியார், ஹரிஜன ஆலயப் பிரவேசத்தை ஆதரிக்கின்றனரென்று ஸ்ரீ. கேளப்பன் கூறியது உண்மை என்று ஏற்படுகிறது.

ஆலயப் பிரவேச சம்பந்தமாய் சென்னை சட்ட சபை யில் டாக்டர் சுப்பராயன் மசோதாவை புகுத்த வைசிராய் அனுமதி யளிக்கவேண்டிய அவசிய மிருக்கிறது. இது சம் பந்தமாக வைசிராய் தீர்ப்பை ஜனவரிமீ 15-ந் தேதிக்குள் அறிவிப்பது சாத்யமில்லை என சர்க்கார் அறிவித்துள்ள னர். எனவே புது வருஷத்தின் இரண்டாம் நாளன்று ஆரம்பிக்க உத்தேசித்திருந்த பட்டினி விரதத்தை நான் தேதி குறிப்பிடாமல் ஒத்திவைத்து விடலானேன். எவ்விதத்

திலும் வைசிராய் தீர்மானம் அறிவிக்கப்படும் தேதி வரை, பட்டினி ஒத்திவைக்கப் பெற்றிருக்கும். இவ்விதம் ஒத்திவைப்பதை ஸ்ரீ. கேளப்பனும் ஒப்புக்கொண்டிருக்கிறார்.

பொது ஜனங்களின் மனோபாவம் வெளியாக வேண்டுமெனும் எண்ணத்துடனேயே பட்டினி விரதமிருக்க உத்தேசித்திருந்தேன்.

நான் ஏற்கனவே கூறியிருப்பதை மீண்டும் திருப்பிச் சொல்லியாவது எனது நிலைமையை விளக்குகிறேன். எனது பட்டினியை சுத்த ஆன்மார்த்தமானதென்றே நான் கொண்டிருக்கிறேன். எனவே அதை பூரணமாக விளக்குவதென்பது முடியாதிருக்கிறது. மகா ஜனங்களின் மனச்சாட்சியைத் தூண்டவேண்டுமென்பதே இவ்விஷயமாக எனது நோக்கமாகும். தீமையையும் புன்மையையும் சாதாரண முறைகளில் நீக்க முடியாதிருப்பின் தபசிருப்பது மனித முயற்சிக்கு உதவி யளிக்குமென்று ஹிந்து மதம் முறையிடுகிறது. நிபந்தனையுடனோ, அன்றி நிபந்தனையன்றியோ பிராயோபவேசம் செய்வதானது அவ்வித தபசின் தீவிர முறையாகும். ஆகையால் இது புதிய காரியமல்ல.

பாமர ஜனங்களிடையே எனக்கு இருந்து வருவதாகச் சொல்லப்படும் செல்வாக்கின் காரணமாகத்தான் எனது உபவாசம் பிறர் கவனத்தை இழுத்தது என்று கொள்ளலாம். எனக்கு செல்வாக்கு இல்லாவிடில் இதை ஒருவேளை ஒருவரும் கவனித்தே இருக்கமாட்டார்கள்.

ஹிந்து மதம் தன் தூய நிலையிலிருந்து விழுந்துவிட்டதென்பதே எனது துணிபு. அதனிடம் ஒரு காலத்திலிருந்த ஜீவகளை வேகம் எல்லாம் இப்பொழுது மிகவும் குறைந்து விட்டது. ஹிந்துமதமானது காலதேச வர்த்தமானத்தை அனுசரித்து அவ்வப்போது நடந்துகொண்டு வளர்ச்சி பெற்று வந்தது என்பதற்கு ஹிந்துமதத்தில் பிரமாணமாய்க் கொள்ளும் நூல்களே ஆதாரமாய் இருக்கின்

றன. மதக்கிரந்தங்கள் கடவுளாலேயே அருளப்பட்டவை யென்பதை ஹிந்துமதம் எப்பொழுதுமே வற்புறுத்தி வந்ததாயினும் அதில் சீர்திருத்தங்களைப் புகுத்தவும் மாறுதல்கள் செய்யவும் எப்பொழுதும் பின்வாங்கினதில்லை. ஆகையால்தான் இன்றும் இந்துமதக் கிரந்தங்களில் வேதத்தைமட்டும் வைத்துக் கொள்வதோடு நாம் திருப்தியடையாமல் அதற்குப்பின்னர் ஏற்பட்ட கிரந்தங்களையும் பிரமாணமாகக் கொள்ளுகிறோம்.

பின்னர் இதெல்லாம் மாறியது. ஹிந்து தர்மத்தின் ஆரோக்கியமான வளர்ச்சி தடைப்பட்டது; அந்தராத்மாவின் ஒளியை அறிவதற்கு சாஸ்திரக் கிரந்தங்களை ஓர் கருவியாய் உபயோகிக்கும் காலம் போயிற்று. அந்தராத்மாவின் ஆவல்களுக்கும் உயர்ந்த அபிலாஷைகளுக்கும் அனுகூலமா இல்லையா என்பதை கவனிக்காமல் முன்னுள்ள கிரந்தங்களையே பூரணமான முடிவாகக் கொள்ளும் காலம் ஏற்பட்டது.

கடவுளிடமே நேரில் மன்றுடி கடவுளிடமிருந்து வேதத்திலும்:மற்ற கிரந்தங்களிலும் காணும் உண்மைகளை சம்பாதித்த ரிஷிகளின் சந்ததியாராகிய ஹிந்துக்கள் சோர்ந்து போய்விட்டனர் போலும். புதிய ஆராய்ச்சியை நிறுத்தி விட்டார்கள். "இனிமேல் கடவுளிடமிருந்து கிடைக்க வேண்டியது ஒன்றுமில்லை: கடைசியாக ஏற்பட்ட மத நூலிலுள்ள கடைசி சுலோகம் எழுதுவதற்கு கடவுள் அனுக்கிரஹம்செய்ததோடு கடவுள் தன்வேலையைமுடித்துக் கொண்டு விட்டா"ரென்று நினைக்கத் தலைப்பட்டனர்.அதன் பிறகு கடவுளிடம் மன்றுடி உண்மை ஒளியைப் பெறும் முயற்சியை நிறுத்தி விட்டனர். அதனுல்தான் ஆயிரக்கணக்கான வியாக்கியாதாக்கள் தலையெடுத்து சாஸ்திரக் குவியல்களில் ஒன்றோடொன்றைப் பொருத்துவதற்கு வியாக்கியானம் செய்ய ஆரம்பித்தனர். காலத்தின் தேவைக்கு அவை போதியவையா என்பதை கவனித்தார்களில்லை. புத்தியின் பரிசீலனைக்கு அவை ஒத்து வருகின்றனவா என்பதையும் கவனிக்கவில்லை. பின்னர் விரதம் தபசு முதலியவை கூட வெளித்தோற்றமே பிரதானமாகக்

கொண்ட சடங்குகளாய் விட்டன. ஆனுல் உண்மைத் தவமோ கடவுள் தத்துவத்தின் ஒளியை பெறுவதற்காக அந்தராத்மாவில் நடக்கும் பெரு முயற்சியே யாகும்.

எல்லா ஜீவராசிகளும் ஒரே பொருள்தான் என்ற உண்மையே ஹிந்துமதத்தின் பிரதான தத்துவம். அந்த உண்மையைப் படிப்படியாக பிரத்தியக்ஷமாக உணருவதே அதன் நோக்கம். அந்தத் தத்துவம் வெறும் வேதாந்தத்தில், தர்க்கத்தில் அறிவதாக இல்லாமல் வாழ்க்கையில் நடைமுறையில் அதை கொண்டுவர வேண்டும். இதுவே என்னுடைய மதமாக நானறிந்திருக்கிறேன். ஹிந்து சமூகமானது ஹிந்துமதத்தின் இந்த பிரதானக் கோரிக்கையை புறக்கணித்திருப்பதாக நான் காண்கிறேன். இந்நிலைமையில் மேற்கூறிய கொள்கையை சாதகம் செய்வதற்கு இடைவிடாது நான் முயற்சி செய்திருப்பதாககருதுகிறேனுதலின், நான் இம்மாதிரி விரதம் கொள்வதற்கு லாயக்குள்ளவனென்று நினைத்தேன். இந்த விரதம் மேற்கொள்வதற்கு எனது அந்தராத்மாவின் கட்டளை யிருப்பதாகவும் நான் நினைத்தேன்.

நான் மேற்கொண்ட உபவாசம் யாரையும் தம் மனசாட்சிக்கு மாருக நடக்கும்படி செய்வதற்காக அல்ல என்பதை வாசகர்கள் இப்பொழுது தெரிந்து கொள்வார்களென்று நம்புகிறேன்.

குருவாயூர் ஆலயத்தில், தீண்டாதாருக்கும் பிரவேச உரிமை கிடைக்கவேண்டுமென்பதே பட்டினியின் நோக்கம். சீர்திருத்தக்காரர்கள் பராமுகமாக இருந்துவிட்டாலும், அதனுல் ஆலயப் பிரவேச சம்பந்தமாய் பொது ஜனங்கள் தங்கள் உணர்ச்சியை அறிவுறுத்த தவறிவிட்டாலும், இதற்கான சட்டத்தடைகளையும், நீதிஸ்தலங்களின் தீர்ப்புகளாலேற்பட்டுள்ள முட்டுக்கட்டையையும், மதத்தை பாதிக்கும் சென்னை தர்ம பரிபாலன சட்டத்தாலுள்ள தடையையும் நீக்கவேண்டுமென்று பொது ஜனங்கள் கிளர்ச்சி செய்யாது சும்மாயிருப்பினும், பட்டினி விரதத்தை மேற்கொள்ள

வேண்டியதே. பழைய விரதம் ஈடேறவேண்டுமாயின், பட்டினியை அவ்வித நிலைமையில் மேற்கொள்ளவேண்டியது அவசியமாகும். குருவாயூர் ஆலயப் பிரவேசத்தை ஆதரிப்பதாக நம்பப்படுபவர்கள் நடந்துகொள்ளும் பான்மையையே எனது உபவாசம் பொறுத்திருக்கிறது. எனவே உத்தேசிக்கப்பெற்ற பட்டினியில் எவ்வித நிர்ப்பந்த யோசனையும் இல்லை என்பதை வாசகர்கள் எளிதில் அறியலாமென்று நான் நம்புகிறேன். எனது பட்டினியானது நிபந்தனையற்று திட்டமாக இருக்குமாயின், அதில் எவ்வித நிர்ப்பந்தமுமிருப்பதற்கில்லை. ஏனெனில், பொது ஜனங்கள் எதைச்செய்தாலும் பட்டினியை நிறுத்த முடியாது. ஓர் நிபந்தனை பட்டினியானது, நிர்ப்பந்தமேற்படுத்துகிறதென்று யாராகிலும் கருதுவார்களாகில், அது அவ்வித நிபந்தனையைக் கருதியே யாகுமேயன்றி, பட்டினி முறைக்காக அல்லவென்பது தெளிவு. நான் பட்டினி கிடந்ததால், எவரும் தங்கள் கொள்கைகளை கைவிட்டதில்லை என்பது எனது அனுபவமாகும். இது குருவாயூர் கணக்குமூலம் நன்கு புலனாகும்.

ஜாதிஹிந்து, ஹரிஜன பிரதிநிதிகள் எரவாடா ஒப்பந்தம் செய்துகொண்டனர். அவ்வொப்பந்தம் பம்பாயில் கூடிய புகழ்பெற்ற மகாநாட்டில் ஊர்ஜிதமான சமயத்தில் ஜாதிஹிந்துக்கள் கீழ்க்கண்ட தீர்மானம் செய்தனர்:—

"கேவலம் பிறப்பு காரணமாக ஹிந்துக்களிடையே எவரையும் தீண்டத்தகாதவரென இனிமேல் கருதக்கூடாதென இம்மகாநாடு தீர்மானிக்கிறது. இதுவரை அவ்விதம் கருதப்பெற்று வந்துள்ளவர்களுக்கு, பொது கிணறுகள், பொது பள்ளிக்கூடங்கள், பொது ரஸ்தாக்கள், இதர பொது ஸ்தாபனங்கள் முதலியவைகள் சம்பந்தமாய் இதர ஹிந்துக்களைப் போன்ற சமஉரிமை இனி இருந்துவரும். முதலில் வாய்க்கும் சந்தர்ப்பத்தில் இவ்வித உரிமைகள் சட்டபூர்வமாக அங்கீகரிக்கப்படும். இவ்வித சம உரிமைகள் முன்னதாகவே அங்கீகரிக்கப்படாவிடில் சுயராஜ்ய பார்லிமெண்டில் இது சம்பந்தமான சட்டமியற்றுவதே அநேகமாக முதல் வேலையாக இருக்கும். தீண்டத்தகாதவரென்று

கூறப்படும் வகுப்பினருக்கு தற்போது ஜாதி ஹிந்துக்கள் ஏற்படுத்தியுள்ள சமூக அசௌகரியங்களனைத்தையும், ஆலயப் பிரவேச தடையையும் கூடியசீக்கிரம் அகற்ற சட்ட சம்மதமான சகல சமாதான முறைகளையும் அனுஷ்டிப்பதென்பது எல்லா ஹிந்து தலைவர்களின் கடமையாகுமென்பதை ஒப்புக்கொள்ளுகிறோம்.”

பிரபல ஜாதி ஹிந்துக்களே இத்தீர்மானம் நிறைவேற்றியுள்ளனர். இந்திய தேசத்தினருள், ஹிந்துக்கள் பகுதியெனக் கூறிக்கொள்ளும் இப்பிரபலஸ்தர்கள் பொது கோவில்களிலும், இதர பொது ஸ்தாபனங்களிலும் ஹரிஜனங்களை அனுமதித்து, ஹரிஜனங்களுடன் தினே தினே சகோதர பாவத்துடன் பெரிதும் பழகவேண்டியது அவர்களது கடமையாகும். எரவாடா ஒப்பந்தம் தயாராகி வெளிவந்த சமயத்தில் குருவாயூர் ஆலயப் பிரவேச சம்பந்தமாய் ஸ்ரீ.கேளப்பன் பட்டினி விரதத்தை அனுஷ்டித்து வந்தார். கள்ளிக்கோட்டை ஸாமூதிரி கூறியிருந்த யோசனையை முக்கியமாகக்கருதி, நான் ஸ்ரீ. கேளப்பனை பட்டினி விரதத்தை நிறுத்திவைக்குமாறு கேட்டுக்கொண்டேன். எரவாடா ஒப்பந்தத்தால், வகுப்பு தீர்ப்பு சம்பந்தப்பட்ட அம்சங்களை பிரிட்டிஷ் சர்க்கார் ஒப்புக் கொண்டபின் நான் எனது உபவாசத்தை முடித்து பாரணை செய்த பொழுது, மேற்கூறிய தீர்மானத்தை காரியத்தில் நிறைவேற்றி வைக்கவும், ஜாதி ஹிந்துக்கள் பொதுவாக ஒப்பந்தப்படி நடந்துகொள்ளவும் என்னை பிணையாக, நான் மானஸீகமாகவும், கடவுள் முன்னிலையிலும் சத்தியம் செய்து கொண்டேன். மேலும் டாக்டர் அம்பேத்காரிடமும் இவ்விதமே உறுதி கூறினேன். எனது முயற்சியை எவ்விதத்திலும் தளர்த்திவிட்டாலும், தீண்டாமை விலக்கு சம்பந்தமாக பட்டினி யோசனையை அடியுடன் கைவிட்டாலும் நான் நம்பிக்கை துரோகி யாவதன்றி, ஹரிஜனங்களுக்கும் துரோகம் செய்தவனுவேன். வாயில்லாப் பூச்சிகளான திக்கற்ற ஹரிஜனங்களுக்கு ஓர் வார்த்தை. சனதனி யென்று கூறிக்கொள்ளும் எந்த ஹிந்துவுக்கும் ஹிந்து மதத்திலும், வேதங்களிலும் எவ்வளவு ஆர்வமும் பற்றுதலும் இருக்கிறதோ, அவ்வளவு தீவிர

உணர்ச்சியுள்ள நூற்றுக்கணக்கான ஹிந்து சமூக சீர்திருத்தக்காரர்கள், தீண்டாமையை வேருடன்களைந்தெறிய முயற்சிப்பதில், என்னைப்போல், தங்கள் உயிர்களையும் தியாகம் செய்ய சித்தமாயிருக்கின்றனரென்பதை ஹரிஜனங்கள் உணர வேண்டுகிறேன். தீண்டாமை ஒழிப்பதெனும் தீர்மானத்தை கையை உயர்த்தியோ அன்றி வாய் வார்த்தையாலோ ஆதரித்து ஊர்ஜிதம் செய்தவர்களுக்கும், எனக்கும் தீண்டாமை அடியுடன் ஒழியும் வரை ஓய்வென்பதே இருக்க முடியாது. தீண்டாமையை சம்ஸ்காரம் செய்த பின், அதன் சாம்பலிலிருந்தே ஹிந்து மதம் புனருத்தாரண மடைந்து, பரிசுத்தமாகி, உலகத்தில் சக்தியுடனும், சக்தி அளிக்கும் ஓர் உபகரணமாகவு மிருக்க முடியும்.''

## ஸ்ரீ. சி. ராஜகோபாலாச்சாரியார் வேண்டுகோள்.

ஸ்ரீ. சி. ராஜகோபாலாச்சாரியார் வெளியிட்ட அறிக்கையாவது:—

"குருவாயூர் ஆலயப் பிரவேச சம்பந்தமாக மகாத்மா உபவாச மிருக்க விருந்ததை இப்பொழுது ஒத்தி வைத்திருக்கிறார் எனக்கேட்டு இந்தியா வெங்குமுள்ள ஸ்திரீ புருஷர்கள் விசேஷ ஆறுதலடைந் திருப்பார்கள் என்பதில் ஆக்ஷேபமில்லை. குருவாயூர் ஆலய விஷயத்தில் சம்பந்தப்பட்டவர்களில் பெரும் பகுதியினர் பிரவேசத்தை ஆதரித்து அபிப்பிராயம் தெரிவித்தும், அதை அநுஷ்டானத்துக்குக் கொண்டு வருவதில் சட்ட சம்பந்தமான சில ஆக்ஷேபங்களிருக்கின்றன. இவ்வித ஆக்ஷேபங்களை நிவர்த்திக்க ஏதாவது மசோதா கொண்டுவந்தால்,இந்தியா கவர்ன்மெண்டு சட்டப்படி அதற்கு முன்னதாக அநுமதி பெற வேண்டியிருக்கிறது. இதை உத்தேசித்து தான் மகாத்மா தற்சமயம் தேதி குறிப்பிடாமல் உபவாசத்தை ஒத்திவைத்திருக்கிறார். உபவாசத்தையே அடியோடு விட்டு விடும்படி நான் அவரை மன்றாடிக் கேட்டுக் கொண்டேன். ஆனால் எனது முயற்சி பலிக்கவில்லை. இவ்விஷயத்தில் அவர் உபவாசமிருக்க உறுதி கொண்டிருப்பதின் முக்கிய காரணத்தை விளக்க வேண்டியது இப்போது அவசியமாக

விருக்கிறது. பொதுஜனங்களின் அக்கரை குறைவால் நமது கோரிக்கை ஈடேறுமலில்லை என்பதையும், சட்டமும் கவர்னர் ஜெனரலின் அங்கீகாரமுந்தான் இப்போது குறுக்கே நிற்கின்றன வென்பதையும், தன்னலத்தியாகம் என்பது அவரது நண்பர்களையும் அநுதாபிகளையும் மன மிரங்கச் செய்யுமாயினும் மற்றவர்கள் விஷயத்தில் விசேஷ மாறுதலை உண்டு பண்ணுதென்பதையும் நான் எடுத்துச் சொன்னேன். அவர் அஹிம்ஸா தத்துவத்தின் முன் ஹிம்ஸை முறை எதுவும் நிலைக்காதென்றும், பொதுஜனங் கள் உண்மையான உணர்ச்சியுடன் வற்புறுத்தினல் கவர் னர் ஜெனரல் ஆலயப்பிரவேச மசோதாக்களுக்கு அநுமதி கொடுக்காமலிருக்க முடியாதென்றும், இதற்காகத் தாம் தவம் கிடக்கவேண்டியது அத்யாவசியமென்றும் கூறினர். சர்க்கார் அநுமதி கொடுக்க மறுத்தால், அவர்கள் தங்க ளுக்கு அநுமதி கொடுப்பதைத்தவிரவேறு வழியில்லையென நினைக்காத பட்சத்தில், நாட்டில் போதுமானபடி வேலை நடக்க வில்லையென்று தான் அதற்கு அர்த்தமென்றும், அதற்கு பொதுஜனங்கள் சர்க்காரை வற்புறுத்த பொதுஜன அபிப்பிராயத்தை உருப்படுத்தத் தீவிர முயற்சி செய்தால், தாம் உபவாசத்தை மேற் கொள்ளப் போவ தில்லை யென்றும் கூறியிருக்கிறுர்.

ஆகவே நாம் அடுத்தபடி செய்ய வேண்டிய முக்கிய வேலை பொதுஜன அபிப்பிராயத்தை உருப்படுத்தி தற் போது அங்கீகாரத்துக்கு வந்துள்ள ஆலயப் பிரவேச மசோதாவுக்கு இராஜப்பிரதிநிதியை அநுமதி யளிக்கும் படி செய்வதே யாகும். இது சம்பந்தமாக எழுதப்பட் டுள்ள ஆக்ஷேபங்களின் நியாயா நியாயத்தைப் பற்றி விவாதித்துக் கொண்டிருப்பதில் பயனில்லை.

புனவுக்கு வந்துள்ள நண்பர்களின் ஆலோசனைப்படி மகாத்மாவின் அங்கீகாரத்தையும் பெற்றுஇந்தியாவிலுள்ள பலருக்கும் நான் இந்த வேண்டுகோளை விடுத்திருக்கிறேன். ஜனவரி மாதம் 8 ந் தேதி யன்று இந்தியா வெங்கும் கூட் டங்கள் கூட்டி ஒரு தீர்மானம் நிறைவேற்றும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்.”

Printed by Raithby & Co. and Published by "Gandhi" Office
29, Sembudoss Street, Madras. January 1933.

# பொதுக்கூட்ட தீர்மானம்

ஸ்ரீ. ராஜகோபாலாச்சாரியார் தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளபடி, பொதுக்கூட்டங்களில் செய்ய வேண்டிய தீர்மானமாவது:—

"குருவாயூரில் பொதுஜன வாக்கெடுக்கப் பட்டதன் முடிவை இப் பொதுக் கூட்டம் வரவேற்கிறது. ஆலயங்களில் இப்போது தொழும் உரிமை உடையவர்கள் ஹரிஜனங்களோடு அந்த உரிமையை அநுபவிக்கத் தாங்கள் தயாராக யிருப்பதாகப் பெருவாரியான ஓட்டுகள் மூலம் அபிப்பிராயம் தெரிவித்திருப்பதை அநுசரித்து தம்பிரான் தக்கபடி நடந்து கொள்ளுவார் என இக்கூட்டம் நம்புகிறது. ஹரிஜனங்களுக்குச் சமூக விஷயத்திலும் மதவிஷயத்திலும் அசௌகரியங்கள் ஏற்படுத்தி யிருப்பது ஹிந்து தாமத்தின் நிரந்தரமான கொள்கைகளுக்கு விரோதமாக விருப்பதாகவும் சமூக நன்மைக்குப் பாதகமாக விருப்பதாகவும் இக்கூட்டம் அபிப்பிராயப் படுகிறது. தற்போதுள்ள சட்டமும் பிரிட்டிஷ் கோர்ட்டுகளில் இதற்குமுன் செய்யப்பட்டுள்ள சில தீர்ப்புகளும் இந்த அசௌகரியங்களைப் போக்கும் விஷயத்தில் தடைக் கல்லாக விருப்பதால், உடனே தக்க சட்டமியற்றி அசௌகரியத்தைப்போக்கவேண்டுமென்றும், சீர்திருத்தம் செய்வதில் ஒரு நிமிஷமும் தாமதம் செய்யக் கூடாதென்றும் இந்தக் கூட்டம் அபிப்பிராயப்படுகிறது. அதோடு கவர்னர் ஜெனரல், சென்னை சட்டசபையில் டாக்டர் சுப்பராயன் கொண்டுவந்துள்ள மசோதாவுக்கும் இந்தியா சட்டசபையில் ஸ்ரீமான் ரங்கய்யர் கொண்டுவந்துள்ள மசோதாவுக்கும் அனுமதியளிக்க வேண்டுமென்றுப் பொதுஜனங்களை அனுமதிக்க விரும்புகையில், அவர்களின் விருப்பத்துக்கு விரோதமாக ஒரு சட்டத்தை வைத்திருப்பது கூடாதென்று இக்கூட்டம் அபிப்பிராயப் படுகிறது."

இவ்விதம் தீர்மானத்தை நிறைவேற்றியவுடன் தந்தி மூலம் இராஜப்பிரதிநிதிக்குத் தகவல் அறிவித்துவிட்டு பிறகு கடிதமூலம் அதை ஊர்ஜிதப்படுத்த வேண்டும். தீர்மானத்தின் பிரதியில் கூட்டத்தில் தலைமை வகித்தவர் கையொப்பமிட்டு அனுப்ப வேண்டும். டில்லியிலுள்ள அகில இந்திய தீண்டாமை விலக்குச் சங்கத்துக்கும் இந்தத் தகவலை அறிவிக்க வேண்டும்.

# " காந்தி "

ஆசிரியர்: டி. எஸ். சொக்கலிங்கம்.

## சிறந்த தேசீய காலணு பத்திரிகை.

படித்தவர்கள் முதல் பாமரர்வரை சகலரும் சுலபமாய் அறியக்கூடிய விதத்தில் தெளிவான, எளிய நடையில் கட்டுரைகள் வெளிவருகின்றன. தயவு தாட்சண்யமில்லாமல், நியாயத்தை எடுத்துக்காட்டி அநியாயத்தை கண்டிப்பதில் " காந்தி " ஒரு பொழுதும் தயங்காது. தமிழர்களால் ஆர்வத்துடன் வாங்கப்படும் பத்திரிகை " காந்தி " ஒன்றே. ஒவ்வொரு இதழிலும் முதல் பக்கத்தில், விஷயங்களை சுலபமாக விளக்கக்கூடிய விநோதப் படங்களுடன் வெளிவருகிறது.

எல்லா ஊர்களிலும் " காந்தி " ஏஜண்டுகளிடம் " காந்தி " பத்திரிகையும் " காந்தி " நூல்களும் கிடைக்கும்.

### கிராமவாசிகளுக்கு

" காந்தி " வருட சந்தா ரூ. 4—8—0. தனியாக ஒரு பிரதி வரவழைத்தால் ஒவ்வொரு பிரதிக்கும் காலணு தபால் கூலி கொடுக்கவேண்டியிருக்கிறது. ஆகவே கிராமவாசிகளின் நன்மையைக் கருதி, ஒரு ஏற்பாடு செய்திருக்கிறோம். ரூ. 1—4—0 அனுப்பினுல் ஒரு மாதத்திற்கு ஒவ்வொரு இதழிலும் 5 பிரதிகள் அனுப்பப்படும். கிராமவாசிகள் 5 பேராகச் சேர்ந்து மாதம் கால் ரூபாய் வீதம்கொடுத்தால், மாதம் முழுவதும் " காந்தி " (13 பிரதிகளை) படித்து இன்புறலாம். கிராமவாசிகள் இந்த ஏற்பாட்டை ஆதரிக்க வேண்டுகிறோம்.

" காந்தி " ஆபீஸ்.

29, செம்புதாஸ் தெரு, சென்னை.